# தூத்துக்குடி மாமன்றம்
# அவசரக் கூட்டப்பொருள்

2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10. 30 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I விதி எண் 3(3)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் அவசரக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. இம்மாநகராட்சி குடிநீர் விநியோகப் பணியில் இந்நகர்மக்களின் வேண்டுதலின் பேரில் திருமணம், சடங்கு, விசேஷங்களுக்கு பொதுமக்கள் பணம் செலுத்துவதின் பேரில் இம்மாநகராட்சி இரண்டு எண்ணங்கள் டில்லர் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மேற்கண்ட இரண்டு டில்லர்களும் பழுதாகி இயங்க இயலாத நிலையில் தொடர்ச்சியாக குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது.

எனவே பொதுமக்கள் நலன் கருதி மினி லோடு வாகனம் (1000 லிட்டர் கொள்ளளவு உள்ள டேங்கருடன் கூடிய) வாங்குவதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 7,40,000/– (ஏழு லட்சத்து நாற்பதாயிரம்)க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

இ1. 24427/08

**தீர்மானம் எண்: 52**

அனுமதிக்கப்பட்டது

2. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள பழைய பேரூந்து நிலையம் சிறுநீர் கழிப்பிடத்தில் வெளிப்புறம் மற்றும் உட்புறம் மராமத்துப் பணி பொது நிதியில் செய்ய 16–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எம். மகேந்திரன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.03% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு சி. ரவி | மதிப்பீட்டிற்கு ரூ 0.10% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 235 நாள் 29–5–2008 ல் ரூ 78,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.03% குறைவானதுமான திரு எம். மகேந்திரன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 255/2007–08

**தீர்மானம் எண்: 53**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

3. இந்நகராட்சி வி.இ. ரோடு மற்றும் ஜார்ஜ் ரோடு இணைக்கும் சந்தை ரோட்டில் வடிகால் கட்டும் பணி பொது நிதியில் செய்ய 25–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எஸ், சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ 3.97% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ 0.08% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 369 நாள் 30–6–2008 ல் ரூ 3,15,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.08% குறைவானதுமான திரு எஸ். ரம்போலா என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 21/2008–09

**<u>தீர்மானம் எண்: 54</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

4. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள வெற்றிவேல்புரம் மற்றும் சாமுவேல்புரம் பகுதியில் சிவப்பு சரள் விரிக்கும் பணி பணி பொது நிதியில் செய்ய 16–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு கே.வி. மாரியப்பன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.23% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு கே. சதா | மதிப்பீட்டிற்கு ரூ 2.95% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 295 நாள் 29–5–2008 ல் ரூ 95,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.23% குறைவானதுமான திரு கே.வி. மாரியப்பன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 5/2008–09

**<u>தீர்மானம் எண்: 55</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

5. இந்நகராட்சி பராமரிப்பிலுள்ள புதிய பேருந்து நிலையத்தின் எதிரில் உள்ள வடிகாலில் மூடி அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 3–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு எஸ். ரம்போலா | மதிப்பீட்டிற்கு ரூ 1.32% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். சுதர்சன் | மதிப்பீட்டிற்கு ரூ 0. 27% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ 58,000/–க்கு சேர்த்து மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.27% குறைவானதுமான திரு எஸ். சுதர்சன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 41/2008–09

**<u>தீர்மானம் எண்: 56</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

6. இந்நகராட்சி வார்டு எண் 13 திரேஸ்புரம் மேற்கு (பூபாலராயர்புரம்) தெருவில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி துறைமுக பொறுப்புக்கழக நிதியின் கீழ் செய்ய 23–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி. எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு ரூ 0. 04% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். பி. முருகேசப் பாண்டியன் | மதிப்பீட்டிற்கு ரூ 2.06% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 308 நாள் 29–5–2008 ல் ரூ 3,05,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 04% குறைவானதுமான திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 30/2008–09

**<u>தீர்மானம் எண்: 57</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

7. இந்நகராட்சி வார்டு எண் 15, அண்ணா காலனியில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி துறைமுக பொறுப்புக் கழக நிதியிலிருந்து செய்ய 23–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி.எஸ்.சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு ரூ 0. 04% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு எஸ். பி. முருகேசப் பாண்டியன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.24% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

<u>அலுவலகக் குறிப்பு</u>

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 308 நாள் 29–5–2008 ல் ரூ 2,15,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 04% குறைவானதுமான திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 31/2008–09

**<u>தீர்மானம் எண்: 58</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

8. இந்நகராட்சி வார்டு எண் 14, திரேசபுரம் கிழக்கு சாலையில் தார்தளம் அமைக்கும் பணி துறைமுக பொறுப்புக் கழக பகுதியில் செய்ய 23–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது

| | | | |
|---|---|---|---|
| 1 | திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு ரூ 0.06% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2 | திரு ஐ. ஜெயசீலன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.87% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |

அலுவலகக் குறிப்பு

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 308 நாள் 29–5–2008 ல் ரூ 7,75,000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.06% குறைவானதுமான திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 32/2008–09

**தீர்மானம் எண் : 59**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

9. இம்மாநகராட்சி செவந்தாகுளம் வரிவசூல் மையத்தில் உள்ள LAN EXTENDER பழுது ஏற்பட்டுள்ளதால் வசூல் மையத்தில் கணணிகள் இயங்காத நிலையில் உள்ளதால் வசூல் செய்ய இயலவில்லை . எனவே மேற்படி LAN EXTENDER அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான HCL தூத்துக்குடி நிறுவனத்தில் நேரடியாக உத்திரவு வழங்கி வாங்கவும், அதற்கான செலவு ரூ 28,000/–க்கும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

இ1. 23574/08

**தீர்மானம் எண் : 60**

அனுமதிக்கப்பட்டது

10. இம்மாநகராட்சி அலுவலகத்தின் கணனி பிரிவு மற்றும் வசூல் மையம் ஆகிய இடங்களில் பொருத்தப்பட்டுள்ள ஏர்கண்டிசனர் பழுது ஏற்பட்டு வருடாந்திர பராமரிப்பு செய்ய இயலாமல் உள்ளது. எனவே மேற்கண்ட 4(2 +2 ) எண்ணம் ஏர்கண்டிசனர் பழுதுபார்க்கவும், வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ளவும் LG ஏர்கண்டிசனர் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான எம்.எஸ்.கே.ஆர்.சி ஏஜென்சீஸ் , தூத்துக்குடி நிறுவனத்தில் நேரடியாக பணி உத்திரவு வழங்கி செய்வதற்கும் அதற்கான செலவீனத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

1. 4 எண்ணங்கள் ஏர்கண்டிசன் பழுதுபார்த்தல் செலவு ..ரூ 8,000/–
2. 4 எண்ணங்கள் ஏர்கண்டிசன் வருடாந்திர பராமரிப்பு செலவு ..ரூ 9,600/–

**அலுவலகக் குறிப்பு** : அனுமதிக்கலாம்.

இ1. 23572/08

**தீர்மானம் எண் : 61**

அனுமதிக்கப்பட்டது

11. இம்மாநகராட்சியில் கணக்கு பிரிவிலுள்ள 5எண்ணம் கணணிகள் வருடாந்திர பராமரிப்பு (9–7–2007 – 8–7–2008) முடிவடைந்து விட்டதால் 2008–2009ஆம் ஆண்டிற்கான வருடாந்திர பராமரிப்பிற்கு மன்ற தீர்மான எண் 676 நாள் 26–11–2007ல் அனுமதித்துள்ள எம்./எஸ் எக்செல் கம்யூட்டர்ஸ், தூத்துக்குடி நிறுவனத்தில் சென்ற ஆண்டு செலுத்திய விலை விகிதம் ரூ 2000/– வீதம்

5 கணனிகளுக்கு ரூ 10,000/– விலைவிகிதத்தில் நேரடியாக உத்திரவு வழங்கவும் அதற்கான செலவீனத்திற்கும் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம்.

இ1. 23573/08

**<u>தீர்மானம் எண்: 62</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

12. இந்நகராட்சியின் பராமரிப்பில் உள்ள தெற்கு காட்டன் ரோடு மற்றும் தந்தி ஆபீஸ் ரோட்டினை இணைக்கும் சந்தை ரோட்டில் உள்ள குழாய் பாலம் பழுதடைந்து கழிவுநீர் செல்ல இயலாமலும் மேலும் மார்க்கெட்டிற்கு செல்லும் வாகனங்கள் மற்றும் பொது மக்கள் செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் புதிதாக கான்கிரீட் பாலம் அமைக்கத் தயார் செய்யப்பட மதிப்பீடு தொகை ரூ 92000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு** – அ) மன்றம் அனுமதி வழங்கலாம்
ஆ) மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி
ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ம.ப.எண். 11/2008–09

**<u>தீர்மானம் எண்: 63</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சி பகுதி தெற்கு காட்டன் சாலை காரனேசன் தியேட்டர் அருகில் சிறுபாலம் அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 2–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வை.கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு. ஜே.விஜயன் | மதிப்பீட்டிற்கு ரூ 1.96 % அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2)திரு. பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு ரூ 0.08 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக் குறிப்பு**

1)வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 8.08 ரூ குறைவானதுமான திரு. பி. கண்ணன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2) மேற்படி பணிக்கு நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண். 11/2008–2009

**<u>தீர்மானம் எண்: 64</u>**

அலுவலகக் குறிப்பு 1 ஒப்புக் கொள்ளப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சி பகுதி வி. இ. சாலை சந்திப்பு மற்றும் சுப்பிரமணியபுரம் இணைக்கும் சாலையில் தார்சாலை அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 16–7–2008 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) திரு. ஜே.விஜயன் | மதிப்பீட்டிற்கு ரூ 0. 46% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |
| 2)திருமதி,எஸ்,சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு ரூ 1. 33 % குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக் குறிப்பு**

1) மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண், 656 தேதி 31–10–2007ல் ரூ. 120000/–க்கு அனுமதி வழங்கியுள்ளது.

2) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 8.08 % குறைவானதுமான திருமதி. எஸ். சாந்தி அருட்லா நிர்மலாதேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம். ம.ப.எண். 164/2007–2008

**<u>தீர்மானம் எண்: 65</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக் கொள்ளப்பட்டது

15. இம்மாநகராட்சியின் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31/7/2008ல் ஓய்வு பெற்ற திருமதி கருப்பியம்மாள் / பொம்மன் என்பவர் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்த சிறப்பு சேம நல நிதி சந்தா தொகை ரூ 2960/– வட்டி ரூ. 2061/– மற்றும் பங்குத் தொகை 10000/– ஆக மொத்தம் ரூ 15021/– ஐ அன்னாருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்.

எச்2/23446/08

**<u>தீர்மானம் எண்: 66</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சிக்கு சொந்தமான நகராட்சி அலுவலகம், மற்றும் நகராட்சி அலுவலக கட்டிடங்கள் பூங்காக்கள் ஆடு அடிக்கும் இடம் இரண்டு பேருந்து நிலையங்கள் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மின்சாதன எரிவாயு அரங்கம் கழிவுநீர் நீரேற்று நிலையம் மகப்பேறு நிலையங்கள் அனைத்திலும் 05–08–08 அன்று மாநகராட்சி தொடக்க விழாவிற்காக மின் அலங்காரம் செய்ததை முன்னிட்டு பிரிவு 15ன் கீழ் செலவிடப்பட்ட செலவினத் தொகை ரூ 136185/– (ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்து ஆறு ஆயிரத்து நூற்றி எண்பத்தைந்து மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

இ3/22772/08

**<u>தீர்மானம் எண்: 67</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

17. தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் உள்ள 51 வார்டுகளில் வதை செய்யப்படு. மாடுகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 20/8/2008ல் நடைப்பெற்ற ஏலம்/ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழக்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1)திரு ஆர். உதயகுமார் 102ஜி குறிஞ்சி நகர் 7ம் தெரு, தூத்துக்குடி | ரூ 80457/– |
| 2)திரு.ஆர். காமாட்சி (எ) காமராஜ், 269. ஜார்ஜ் ரோடு, இந்திராநகர், தூத்துக்குடி. | ரூ.93257/– |

**அலுவலகக் குறிப்பு**

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் மாடு வதை செய்யுமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு ஆர். காமாட்சி (எ) காமராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 93257/– (7 மாதத்திற்கு கடந்த ஆண்டு மாடு 1க்கு ரூ 10/– அடிப்படையில் உரிமம் தொகை ரூ 79000/–ஐ தற்போது வசூல் செய்ய நிர்ணயிக்கப்பட்ட தொகை மாடு 1க்கு ரூ 20/– வீதம் கணக்கிட்ட வகையில் உரிமைத்தொகையான ரூ 92169/–ஐ மீதம் உள்ள குத்தகை காலமான 7 மாதத்திற்கு கணகிடப்பட்ட வரும் தொகையை விட ரூ 1088 கூடுதலாக உள்ளதால் திரு ஆர். காமாட்சி (எ) காமராஜ் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 93257/– ஐ ஏற்று 1/9/2008 முதல் 31/3/09 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

அ16/8803/2008

**<u>தீர்மானம் எண்: 68</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18. தூத்துக்குடி மாநகராட்சியில் உள்ள 51 வார்டுகளில் வார்டு எண் 5, 8, 22, 38, 43, 48 மற்றும் 51 ஆகிய எட்டு வார்டுகள் தவிரமீதம் உள்ள 43 வார்டுகளில் மன்றத்தீர்மான எண் 296 நாள் 29/5/2008ன் படி வதை செய்யப்படும் ஆடுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமதிற்கு 20/8/08ல் நடைபெற்ற ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

1) திரு. ஆர். காமாட்சி (எ) காமராஜ்
   296 , ஜார்ஜ் ரோடு, தூத்துக்குடி. ரூ 146500/–
2) திரு. ஆர். உதயகுமார்
   102ஜி. குறிஞ்சி நகர், போல்பேட்டை மேற்கு,
   தூத்துக்குடி ரூ. 115000/–

**அலுவலகக் குறிப்பு**

தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் உள்ள 51 வார்டுகளில் வார்டு எண் 5,8,22,38,43, 48 மற்றும் 51 ஆகிய 8 வார்டுகள் தவிர மீதம் உள்ள 43 வார்டுகளில் வதை செய்யப்படும் ஆடுகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு உயர்ந்த ஒப்பந்தப்புள்ளியாக திரு,ஆர். காமாட்சி (எ) காமராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 146500/–ஐ கடந்த ஆண்டு மற்றும் மூன்று ஆண்டு சராசரி உரிமம் தொகை 51 வார்டுகளுக்கு வழங்கப்பட்டதால் அதை 43 வார்டுகளுக்கு ஒப்புநோக்கு இயலாததால் 19/7/08 முதல் 20/8/08 முடிய 1 மாதம் துறை மூலம் வசூல் செய்த தொகையான ரூ 19980/– அடிப்படையில் 7 மாதத்திற்கு வரும் தொகை ரூ 139860/–ஐ விட ரூ 6640/– கூடுதலாக உள்ளதால் திரு. காமாட்சி (எ) காமராஜ் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ 146500/–க்கு 1/9/08 முதல் 31/3/2009 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/8803/2008

**<u>தீர்மானம் எண்: 69</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சி பொது சுகாதார மலேரியா பிரிவிற்கு தேவையான கொசுக்களை ஒழிப்பதற்கான PYRETHRUM EXTRACT என்ற மருந்து வாங்குவதற்கு நகராட்சிகளின் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 060560 / 2006 J 2 நாள் 28/9/07ன் படி M/s Pyrethrum India Pvt. Ltd. Kolkatta அவர்களிடமிருந்து பெறுவதற்கு பரிந்துரை செய்துள்ளார்கள். அதன்படி 150லிட்டர் மருந்து வாங்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றது. ஒரு லிட்டர் ரூ 390/– வீதம் 150 லிட்டருக்கான தொகை ரூ 64350/–ஐ (ரூபாய் அறுபத்தி நாலாயிரத்து முந்நூற்றி ஐம்பது மட்டும்) மேற்படி கம்பெனிக்கு வாங்கவும் அதனை மாநகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குறிப்பு – 1. அனுமதிக்கலாம்

எச்4/22075/2007

**<u>தீர்மானம் எண்: 70</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. இம்மாநகர் பகுதி நீதிமன்ற வளாகம் மற்றும் குடியிருப்பு பகுதிகளில் தேங்கியிருந்த மழைநீரை டேங்கர் லாரி மூலம் அப்புறப்படுத்தும் பணிக்கு 26/3/2008 அன்று விலைப்புள்ளி வரப்பட்டது, அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளிதாரர் | ஒரு தண்ணீர் லாரி ஒரு நாள் (இரவு பகல் மட்டும்) |
|---|---|---|
| 1) | ஸ்ரீ வெட்காளியம்மாள் எர்த் மூவர்ஸ், தூத்துக்குடி | ரூ, 3000/– |
| 2) | குமார் ட்ரான்ஸ்போர்ட், தூத்துக்குடி | ரூ. 3300/– |

**அலுவலகக் குறிப்பு –** வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் ஸ்ரீ வெட்காளியம்மாள் எர்த் மூவர்ஸ், தூத்துக்குடி அவர்களின் ரூபாய் 3000/–க்கு குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ளதை மாமன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி செய்ய நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண்.29/2008.09

**<u>தீர்மானம் எண்: 71</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

21. இந்நகர் ஸ்டேட் பாங் காலனி சுற்றியுள்ள பகுதியில் வெள்ள நீரை JCB இயந்திரம் மூலம் வடிகால் அமைக்கும் பணி பொது நிதியில் செய்ய 22–3–2008 அன்று விலைப்புள்ளி வரப்பட்டது, அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது,

| வ.எண் | விலைப்புள்ளி தாரர் | JCB இயந்திரம் ஒன்றுக்கு ஒரு மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1 | ஸ்ரீ வெட்காளியம்மாள் எர்த் மூவர்ஸ், தூத்துக்குடி | ரூ, 650/– |
| 2 | குமார் ட்ரான்ஸ்போர்ட், தூத்துக்குடி | ரூ. 700/– மட்டும் |

**அலுவலகக் குறிப்பு –** வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் ஸ்ரீ வெட்காளியம்மாள் எர்த் மூவர்ஸ், தூத்துக்குடி– அவர்களின் விலைப்புள்ளி ரூபாய் 650/– விலைவிகிதம் குறைவாக கொடுத்துள்ளதை மாமன்றம் ஒப்புகொள்ளலாம், அவசர அவசியத்தை முன்னிட்டு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி பணி செய்ய மேற்கொண்டதை மன்றம் அங்கிகரிக்கலாம்.

ம.ப.எண்.24/2008/09

**<u>தீர்மானம் எண்: 72</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

22, இம்மாநகராட்சி தொடக்க விழா தொடர்பாக நகர்மன்றத் தலைவர் அவர்கள் ஜுலை 2008 மாதத்தில் அலுவலக விஷயமாக சென்னை சென்று வந்ததற்கான பயணப்பட்டியல் ரூ 2862/– ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு– அனுமதிக்கலாம்.

பி4/8475/2008

**<u>தீர்மானம் எண்: 73</u>**

அனுமதிக்கப்பட்டது

23. இந்நகராட்சிக்குச் சொந்தமான ஜெராக்ஸ் இயந்திரத்தின் (Toner) பழுதாகி தீர்ந்துவிட்ட காரணத்தினால் 14–7–2008 அன்று நடைபெற்ற நகர்மன்ற அவசரக் கூட்டப்பொருள்கள் A.P.S. ஜெராக்ஸ் அண்ட் கம்ப்யூட்டர்ஸ் தூத்துக்குடி நிறுவனம் மூலம் ஜெராக்ஸ் எடுக்கப்பட்டு அலுவலக உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டது, மேற்படி கூட்டப்பொருள்கள் ஜெராக்ஸ் எடுத்தற்குரிய செலவினம் ரூ 660/–ஐ (ரூபாய் அறூநூற்றி அறுபது மட்டும்) மேற்படி நிறுவனத்திற்கு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது,

அலுவலகக் குறிப்பு –1) அனுமதிக்கலாம்.
2) அலுவலக அவசர அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழஙகப்பட்டதை அஙகீகரிக்கலாம்.

பி3/5615/07

**<u>தீர்மானம் எண்: 74</u>**

அலுவலகக் குறிப்பு 1 அனுமதிக்கப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது.

24. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் முக்கியமான சந்திப்புகள் மற்றும் பேருந்து நிலையங்களில் உயர்மின்கோபுர விளக்குகள் அமைத்திட மன்றத்தால் பரிந்துரைக்கப்பட்டு அரசு தன் ஆணை எண். 109 நாள் 01/08/08ல் அனுமதிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டு உள்ளது. கீழ்க்கண்ட இடங்களில் உயர்மின் கோபுர மின் விளக்குகள் அமைக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| 1 | புதிய பேருந்து நிலையம் | 2 |
| 2 | பழைய பேருந்து நிலையம் | 1 |
| 3 | சிவன்கோவில் சந்திப்பு | 1 |
| 4 | மாதாகோவில் சந்திப்பு | 1 |
| 5 | ராஜாஜி பார்க் பகுதி (மெயின் சாலை) | 1 |
| 6 | பூபாலராயர்புரம் கருப்பட்டி சொசைட்டி சந்திப்பு | 1 |
| 7 | பாளையங்கோட்டை ரோடு ஜெயராஜ் சாலை சந்திப்பு | 1 |
| | மொத்தம் | 8 |

மற்றும் மின்சார சேமிப்பு விளக்குகள் முதல் கட்டமாக கீழ்க்கண்ட தெருக்களில் மாற்றி அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

1) பால விநாயகர் கோவில் தெரு
2) புதிய பேருந்து நிலையம் முதல் 4வது இரயில்வே கேட் வரை (மீளவிட்டான் சாலை)
3) ஸ்டேட்பாங்காலனி சாலை (60 அடி சாலை)
4) போல்பேட்டை 60 அடி சாலை

**<u>அலுவலகக் குறிப்பு –</u>**

1) இதற்கான செலவினம் ரூ 60.00 லட்சம் அனுமதி அளிக்கலாம்.
2) நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதிகளை பெற்று நடவடிக்கை தொடர அனுமதிக்கலாம்
3) அரசு அனுமதிக்கும் தொகையை விட கூடுதல் செலவினம் பொது நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

ந.க.எண். 18217./2008/இ1

**<u>தீர்மானம் எண்: 75</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

25. இம்மாநகராட்சி மேயர் அவர்களுக்கு கறுப்பு மற்றும் சிவப்பு நிற அங்கி தயாரிக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது, அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1) திரு. ஜே. சுரேஸ் ஜெயக்குமார் | ரூபாய் 30,000/– டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2) திரு கே. பழனியப்பன் | ரூபாய் 31,000/– டேவணித்தொகை செலுத்தியுள்ளார். |

**அலுவலகக் குறிப்பு**

1) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.
2) மேற்கண்ட பணிக்கு செலவுத் தொகை ரூ 30000/– அனுமதிக்கலாம். மேலும் மேற்கண்ட தொகையினை அரசு ஆணை எண் 109 நாள் 1–8–2008 தேதி அனுமதி வழங்கப்பட்ட உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுக்காக அனுமதிக்கப்பட்ட தொகைகளை செலவு செய்யலாம். மேலும் அவசர அவசியத்தை முன்னிட்டு மேற்கண்ட பணி செய்து முடிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ம.ப.எண்.90/2008–09

**<u>தீர்மானம் எண்: 76</u>**

அலுவலகக் குறிப்பு1 ஒப்புக்கொள்ளப்பட்டது
அலுவலகக் குறிப்பு 2 அங்கீகரிக்கப்பட்டது

26. இந்நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா நடைபெற்றது. தொடக்க விழாவிற்கு மாநகராட்சியின் நினைவுத்தூண் ஜெயராஜ் ரோடு மற்றும் பாளையங்கோட்டை ரோடு சந்திப்பிலுள்ள வண்டிப்பேட்டை இடத்தில் உடனே நிறுவுவதற்கு அவசர அவசியம் கருதி நகராட்சியின் சட்ட விதி எண் 15 ன் கீழ் நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு, எஸ். சுதர்சன் என்பவர் மூலம் பணியினை மதிப்பீடு விலைவிகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகை ரூ. 10,63,492/–. மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** –பதிவு செய்யலாம்.

ம.ப.எண். 61/2008–2009

**<u>தீர்மானம் எண்: 77</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

27, இந்நகராட்சியினை மாநகராட்சியால்தரம் உயர்த்தப்பட்டது அதற்கான தொடக்க விழா பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள S.A.V. பள்ளி மைதானத்தில் வைத்து நடைபெற்றது, எனவே நகராட்சிக்கு சொந்தமான வண்டிபேட்டை பகதியில் பொது மக்கள் வருவதற்கு மற்றும் வாகனங்கள் நிறுத்துவதற்கம் ஏதுவாக தளம் சமப்படுத்தி மற்றும் சரள் விரிப்பு பணிகள் உடனே செய்து தர வேண்டும் என மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடித எண் 55346/08 நாள் 28/7/08ல் தெரிவிக்கப்பட்டுள்ளது, மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நேரடி ஆய்வின் போது தெரிவிக்கப்பட்டது/ எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்தில் பொது மக்களின் வசதிக்காகவும் வாகனங்கள் நிறுத்துவதற்காகவும் கிராவல் அமைத்ததற்கு செலவு தொகை ரூ.194010/–க்கு நகராட்சி விதி எண் 15ன் கீழ் செலவு செய்யப்பட்டதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் பதிவு செய்யலாம்.

ம.ப.எண். 63/08–09

**<u>தீர்மானம் எண்: 78</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

28. இந்நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா நடைபெற்றது. தொடக்கவிழாவிற்கு மாதிரி நினைவுத்தூண் பணி உடனே செய்வதற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதி எண் 15ன் கீழ் மேற்கண்ட பணியினை உள்ளூர் ஒப்பந்தக்காரர்களிடம் விலை புள்ளி பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு எஸ்.பி. முருகேசபாண்டியன் என்பவர் மூலம் பணி செய்து முடித்ததையும் வேலையின் செலவின தொகை ரூ 35000/– மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு –பதிவு செய்யலாம்.

ம.ப.எண். 91/08–09

**<u>தீர்மானம் எண்: 79</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

29. இந்நகராட்சியை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா நடைபெற்றது. மாநகராட்சி நினைவுதூண் மற்றும் நினைவு.தூண மாதிரி திறப்பு விழாவிற்கு அலங்கார துணிகள் மின்மோட்டார்கள் மற்றும் ரிமோட்டுடன் கூடிய பணிகள் உடனே செய்வதற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதி 15ன் கீழ் மேற்கண்ட பணியினை ஒப்பந்தகாரரிடம் விலைப்புள்ளிகள் பெற்று குறைவான விலைப்பிள்ளி கொடுத்துள்ள திரு ஜே, சுரேஸ்ஜெயக்குமார் என்பவர் மூலம் பணிகள் செய்து முடிக்கப்பட்டதையும் அதற்கான செலவின தொகை ரூ 80,000/– மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – பதிவு செய்யலாம்.

ம.ப.எண் 93/08–09

**<u>தீர்மானம் எண்: 80</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

30, இந்நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா நடைபெற்றது. தொடக்கவிழாவிற்கு மாநகராட்சி புதிய கட்டிட மாதிரி உடனே செய்வ்தற்க அசவர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதி எண் 15ன் கீழ் மேற்கண்ட பணியினை உள்ளூர் ஒப்பந்தகாரரிடம் விலைப்புள்ளிகள் பெற்று குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.பி. முருகேசபாண்டியன் என்பவர் மூலம் பணி செய்து முடித்ததையும் வேலையின் செலவினத்தொகை ரூ 55000/– மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – பதிவு செய்யலாம்.

ம.ப.எண்.92/08–09

**<u>தீர்மானம் எண்: 81</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

31. சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண். 34887/2008p-3 நாள் 07-08-2008ம் தேதிய கடிதத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) நகராட்சிகளுக்கு வழஙகிய கடன் தொகைகளை உரிய காலத்தில் திருப்பி செலுத்தாதபட்சத்தில் மற்றும் கூடுதல் தவணைத்தொகைகளை செலுத்தாதபட்சத்தில் அதனை மாநிலநிதிக்குழு மூலம் இம்மாநகராட்சிக்கு வழஙகும் மான்ய தொகைகளில் ஈடு செய்யப்படும் எனவும் இனிவரும் காலஙகளில் கடன் வழஙகப்படும் போது அதற்கான ஒப்பந்தப்பத்திரம் வழஙகும் பட்சத்தில் டிபிட்கோ மூலம் வழஙகப்படும் கடன் தொகையை மாநில நிதிக்குழு மானியத்தொகையில் ஈடு செய்யப்படும் என்ற நிபந்தனையும் ஏற்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை மாமன்றத்தின் தகவலுக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** மாமன்றம் பதிவு செய்யலாம்.

கோப்பு எண். 25815/பி1/2004

**<u>தீர்மானம் எண் : 82</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

32 இந்நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா நடைபெற்றது. தொடக்கவிழாவிற்கு மாநகராட்சியின் நினைவுத்தூண் இடத்தை சுற்றி வண்ண விளக்குகள் புல்தரை மற்றும் சுறுச்சுவர் பணி உடனே செய்வதற்கு அவசர அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதி எண் 15 ன் கீழ் நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு, எஸ். சுதர்சன் என்பவர் மூலம் பணியினை மதிப்பீடு விலைவிகிதத்தில் செய்து முடிக்கப்பட்டதற்கும் அதற்கான செலவினத்தொகை ரூ. 7,41,545/– மேற்கொண்டதையும் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – பதிவு செய்யலாம்.

ம.ப.எண். 62/2008/09

**<u>தீர்மானம் எண் : 83</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

33. இந்நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் வைத்து நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்த பொது மக்களுக்கு தற்காலிக கழிப்பிட வசதி செய்து தர வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடித எண், 55346–2008 நாள் 28/7/2008ல் தெரிவிக்கப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நேரடி ஆய்வின் போது தெரிவிக்கப்பட்டது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்தில் பொது மக்களின் வசதிக்காக கழிவறை ஐந்து எண்ணம் அமைத்ததற்கும் அதற்கான செலவுத்தொகை ரூ, 1,54,378/–க்கு நகராட்சி விதி எண் 15 ன் கீழ் செலவு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** –மன்றம் பதிவு செய்யலாம்.

ம.ப.எண். 60/2008/09

**<u>தீர்மானம் எண் : 84</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

34. இந்நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அதற்கான தொடக்கவிழா பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள எஸ்.ஏ.வி. பள்ளி மைதானத்தில் வைத்து நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்த பொதுமக்களுக்கு தற்காலிக குடிநீர் வசதிகள் செய்து தர வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண். 55346/08 நாள் 28/7/2008ல் தெரிவிக்கப்பட்டது. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நேரடி ஆய்வின் போது தெரிவிக்கப்பட்டது. எனவே அவசர அவசியத்தை முன்னிட்டு விழா நடைபெறும் இடத்தில் பொது மக்களின் வசதிக்காக 15 இடத்தில் சிண்டக்ஸ் குடிநீர் தொட்டி அமைப்பதற்கு செலவுத்தொகை ரூ 2,91,330/– நகராட்சி விதி 15ன் கீழ் செலவு செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மன்றம் பதிவு செய்யலாம்.

ம.ப.எண்.64/2008–09

**<u>தீர்மானம் எண் : 85</u>**

அலுவலகக் குறிப்புப்படி பதிவு செய்யப்பட்டது

மாமன்றம்,தூத்துக்குடி
நாள் 28–8–2008

மேயர்
மாமன்றம்,தூத்துக்குடி